# விவேகானந்தா ஆசிரம நிலம்: பாரம்பரியப் பகுதியாக தேசிய பதிவேட்டில் இடம் பெற்றது

கோலாலம்பூர், மார்ச் 31–

பிரிக்பீல்ட்ஸில் உள்ள விவேகானந்தா ஆசிரம நிலம் முழுமையும் 2005 ஆம் ஆண்டு தேசிய பாரம்பரியச் சட்டத்தின் கீழ் ஒரு பாரம்பரியப் பகுதியாக தேசிய பதிவேட்டில் இடம்பெற்றுள்ளதாக பிரதமர் இலாகா (சட்டம் மற்றும் துறை சார் சீர்திருத்தம்) துணையமைச்சர் எம். குலசேகரன் கூறினார்.

இதனைத் தொடர்ந்து அந்த பகுதியில் மறு மேம்பாடு, அந்த கட்டிடம் மாற்றி அமைத்தல், சாயம் பூசும் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படாது என அவர் தெளிவுபடுத்தினார். இன்று நாடாளுமன்றத்தில் தேசிய பாரம்பரிய இலாகாவின் துணை தலைமை இயக்குநர் முகமட் மூடா பஹாடின் மற்றும் தேவகுஞ்சரி சம்பந்தன் ஆகியோருடன் இந்த விவகாரம் குறித்து தாம் பேச்சு வார்த்தை நடத்தியதாக ஈப்போ பாராட் நாடாளுமன்ற உறுப்பினருமான அவர் சொன்னார்.

விவேகானந்தா ஆசிரம நிலம் ஒரு பாரம்பரியப் பகுதியாக தேசிய பதிவேட்டில் இடம்பெற்றுள்ளது குறித்து தாம் மகிழ்ச்சி அடைவதாக அவர் சொன்னார்.

இனி அந்த பகுதியில் எந்த ஒரு மேம்பாட்டு திட்டமோ அல்லது மாற்றியமைத்தல் நடவடிக்கைகளோ நடைபெறாது என அவர் தெளிவுபடுத்தினார். அந்த நிலப் பகுதியில் 200 மீட்டருக்குள் எந்த ஒரு பணியும் மேற்கொள்ள திட்டமிடப்பட்டால், பாரம்பரிய ஆணையரிடம் முதலில் கலந்தாலோசிக்க வேண்டும் என அவர் சொன்னார்.





இந்த விவகாரம் குறித்து நேற்று மேலவையில் செனட்டர் டத்தோ நெல்சன் ரங்கநாதன் எழுப்பிய கேள்விக்கு தாம் பதில் அளித்ததாக அவர் குறிப்பிட்டார்.

2040 கோலாலம்பூர் உள் வட்டார திட்டத்தின் வரைவில் விவேகானந்தா ஆசிரமம் ஒரு முக்கிய வர்த்தக பட்டியலில் ஏன் இடம்பெற்றுள்ளது என செனட்டர் நெல்சன் தம்மிடம் கேள்வி எழுப்பியதாக அவர் சுட்டிக் காட்டினார்.

விவேகானந்தா ஆசிரமம் ஒரு பாரம்பரியக் கட்டிடமாக கோலாலம்பூர் மாநகர் மன்றம் அங்கீகரித்துள்ளதால், அந்தப் பகுதியில் எந்தவொரு மேம்பாட்டுத் திட்டமும் நடைபெறாது என தாம் விளக்கம் தந்துள்ளதாக அவர் தெரிவித்தார். சுல்தான் அப்துல் சாமாட் கட்டிடம், கார்கோசா ஸ்ரீ நெகாரா கட்டிடம், சிலாங்கூர் அரச கிளப் கட்டிடம் ஆகியவை பாரம்பரிய கட்டிட பட்டியலில் இடம்பெற்றுள்ளதாக குலா தெளிவுபடுத்தினார்.